# சட்டவரைநர் திணைக்களம்

**2012**

**செயல்நிறைவேற்றுகை அறிக்கை**

## நோக்கு

அரசாங்கத்தின் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுவதற்கு அரசாங்கத்திற்குத் துணைபுரிவதன் மூலம் நல்லாட்சியை உறுதிப்படுத்துதல

## பணி

அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுவதில் துணைபுரிவதற்காக அரசியலமைப்பிற்கிணங்க சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சட்டவாக்கத்தை வரைதல்.

## முகவுரை

சட்டவரைநர் திணைக்களம், "A" தரத்திலான அரசாங்கத் திணைக்களமொன்றாகவுள்ளது. 2010 ஏப்பிறல் 30 ஆந் தேதிய 1651/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் இத்திணைக்களம் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ்ப் பணியாற்றுகின்றது.

சட்டவரைநர் திணைக்களத்தின் முக்கிய பணி, அரசியலமைப்புக்கும் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட முடிபுகளுக்கும் இணங்கப் பல்வேறுபட்ட விடயங்கள் பற்றி அரசாங்கத்தின் கொள்கைகளைச் சட்டவாக்கங்களாக மாற்றுவதற்கானதாகும். இந்நடைமுறையில், திணைக்களமானது புதிய சட்டவாக்கங்களை இயற்றுவதற்கும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்குமான சட்டமூலங்களை வரைகின்றதென்பதுடன், பல்வேறு அரசாங்க அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களையும் மீளாய்வு செய்கின்றது. அத்துடன் மேலதிகமாக இத்திணைக்களத்துக்குப் பொறுப்பிக்கப்பட்ட குறிப்பிட்ட வேறு கடமைகள், சட்டமூலங்களின் வரைவுகளை மீளாய்வதற்குக் கூட்டப்பட்ட தெரிவுக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றுதலையும் மற்றும் அச்சட்டமூலங்கள் விவாதத்திற்கு எடுக்கப்படும் போது பாராளுமன்றத்தில் சமூகமளித்தலையும் பாராளுமன்றத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுதலையும் உள்ளடக்கும். இத்திணைக்களம், அமைச்சுக்களின் கீழ் வருகின்ற அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்டமுறையான குழுக்களும் உட்பட, எல்லா அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சேவைகளை வழங்குகின்றது. பல்வேறு சட்டமூலங்களையும் மற்றும் துணைநிலைச் சட்டவாக்கங்களையும் தயாரித்தல் தொடர்பாக அரசாங்க அமைச்சுக்களுக்கும் மற்றும் திணைக்களங்களுக்கும் சட்ட மதியுரையையும் இத்திணைக்களம் வழங்குகின்றது.

**1. சட்டவாக்கங்களை வரைதல் தொடர்பாகச் சட்டவரைநர் திணைக்களத்தின் பணிகள் பின்வருவனவாகும்:**

(1) புதிய சட்டவாக்கங்களை ஆக்குவதற்கும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் என மும்மொழிகளிலும் சட்டமூலங்களை வரைதல்.

(2) துணைநிலைச் சட்டவாக்கங்களை மீளாய்தலும் மற்றும் அவசியமானவிடத்து, அவற்றை மும்மொழிகளிலும் வரைதலும்.

(3) சட்டமூலங்கள் தொடர்பாகச் சட்ட மதியுரையை வழங்குதல்.

(4) சட்டவாக்கங்களை நிறைவேற்றுதலுடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்றக் கடமைகளைப் புரிதல்.

(5) மாகாண சபை நியதிச்சட்டங்களை வரைதல்.

(6) தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலங்களை (கூட்டிணைத்தல்களின் வரைவுச் சட்டமூலங்கள்) மும்மொழிகளிலும் மீளாய்தல்.

(7) இயைபான துறைசார் அமைச்சுக்களின் ஒத்துழைப்புடனும் அங்கீகாரத்துடனும் சட்டவாக்கங்களை வரைதல் தொடர்பான அரசாங்கக் கொள்கைகளைத் தோதானவாறு மீளவமைத்து செயல்முறைக்குகந்தவாறும் வெற்றிகரமாகவும் அத்தகைய கொள்கைகளை அமுலாக்குவதனை இயலச்செய்தல்.

இத்திணைக்களத்தின் தனித்துவமான சிறப்புக்கூறு என்னவெனில், இத்திணைக்களம் அதன் சொந்தக் கட்டமைக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்தைக் கொண்டிருப்பதில்லை என்பதாகும். இதற்கான காரணம், திணைக்களத்தின் வேலை நிகழ்ச்சித்திட்டம், தேவைப்பட்ட கொள்கை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதன் மேல், கொடுக்கப்பட்டவொரு நேரத்தில், அரசாங்க அமைச்சுக்களினதும், அத்தகைய அமைச்சுக்களின் கீழுள்ள பல்வேறு திணைக்களங்களினதும் சட்டமாக்கல் தேவைகளின் மீது அவசியமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளமையாகும். ஆதலால், சட்டவரைஞர் திணைக்களத்தின் செயல்நிறைவேற்றுகைப் பதிவு, ஏதேனும் குறிப்பிட்ட ஆண்டுபூராகவும் முறையான துறைசார் அமைச்சுக்களினால் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முதனிலை மற்றும் திருத்தச் சட்டவாக்கங்களை, அத்துடன் துணைநிலைச் சட்டவாக்கங்களுக்காகச் செய்யப்பட்ட வேண்டுகோள்களை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதன் அடிப்படையின் மீது மற்றும் அவற்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதன் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது. இத்திணைக்களத்தின் பிரதான பணியாகவுள்ள சட்டவாக்கங்களை வரைதலின் நோக்கெல்லையினுள் அடங்குகின்ற ஏதேனும் வடிவத்திலான சட்டவாக்கம் (ஒன்றில் முதனிலை, திருத்த அல்லது துணைநிலை) வேண்டுகோள் விடுக்கும் அமைச்சுக்கு அல்லது திணைக்களத்துக்கு அது அனுப்பப்படுவதற்கு முன்னர் மூன்றுமொழிகளிலும் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

## 2. பணியாட்டொகுதி

திணைக்களப் பணியாட்டொகுதியினரின் அமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஊழியர் கோப்பு 151 ஆகும்; ஆனால் 2012 ஆம் ஆண்டில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஊழியர் கோப்பு 81 ஆகவிருந்தது

| தொழில் வகுதி | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பு | தொழிலில் இருந்த ஊழியர் கோப்பு |
|---|---|---|
| சிரேட்ட மட்டம் | 37 | 27 |
| மூன்றாம் நிலை மட்டம் | 28 | 4 |
| இரண்டாம் நிலை மட்டம் | 62 | 32 |
| முதனிலை மட்டம் | 24 | 18 |

## 2012.12.31 அன்றுள்ளவாறு சட்டவரைநர் திணைக்களத்தின் ஊழியர் கோப்பு

| சிரேட்ட மட்டம் | | | மூன்றாம்நிலை மட்டம் | | | இரண்டாம்நிலை மட்டம் | | | முதனிலை மட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது | | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது | | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது | | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது |
| சட்டவரைநர் | 01 | 01 | நிருவாக அலுவலர் | 01 | 01 | வரவு செலவுத் திட்ட உதவியாளர் | 01 | 01 | சாரதி | 10 | 05 |
| மேலதிகச் சட்டவரைநர் | 01 | - | பிரதான மொழி பெயர்ப்பாளர் | 02 | 02 | கணக்கு உதவியாளர் | 01 | 01 | கே.கே.எஸ் (KKS) | 14 | 13 |
| பிரதிச் சட்டவரைநர் | 05 | 05 | மொழி பெயர்ப்பாளர் | 24 | 01 | நூலகப் பொறுப்பாளர் | 01 | 01 | | | |
| சிரேட்ட உதவிச் சட்டவரைநர் | 08 | 04 | தகவல் மற்றும் தொடர்பு தொழினுட்ப அலுவலர் | 01 | - | முகாமை உதவியாளர் | 28* | 27 | | | |
| உதவிச் சட்டவரைநர் | 20 | 16 | | | | ஆவணப் படுத்துகை உதவியாளர் | 20 | - | | | |
| பிரதான கணக்காளர் | 01 | 01 | | | - | பதிப்பாசிரியர் | 11 | 02 | | | |
| பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | 01 | -- | | | | | | | | | |
| கூட்டுமொத்தம் | 37 | 27 | | 28 | 04 | | 62 | 32 | | 24 | 18 |
| மொத்தம் | | | | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 151 | | | உள்ளபடியான எண்ணிக்கை | | | 81 | |

* 28 முகாமைத்துவ உதவியாளர்களைக் கொண்ட ஊழியர் கோப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 20 ஆவணப்படுத்துகை உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் அவர்கள் ஆட்சேர்க்கப்பட்டதும் முகாமைத்துவ உதவியாளர்களின் ஊழியர் கோப்பு 20 ஆகக் குறைக்கப்படவுள்ளது.

**திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்**

திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பு 151 ஆகும். எவ்வாறாயினும், திணைக்களமானது, மேற்குறிப்பிடப்பட்ட பாரிய வேலைப்பளுவை நிறைவேற்றுவதற்கு அதற்கு உதவுவதற்கெனத் தற்போது 81 ஊழியர்களுடன் மட்டுமே பணிபுரிகின்றது. கீழே காட்டப்பட்டுள்ளவாறு தொழிலின் பல்வேறு நிலை மட்டங்களில் 70 வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளது.

**சிரேட்ட நிலை மட்டம்**

(அ) சிரேட்ட நிலை மட்டத்தில் சிரேட்ட உதவிச் சட்ட வரைநர் பதவியில் ஐந்து வெற்றிடங்கள் உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைக்கு இசைந்தொழுகச் சொல்லப்பட்ட பதவிக்குத் தகைமையுடைய உதவிச் சட்டவரைநர் எவரும் இல்லாமையினால், அத்தகைய வெற்றிடங்களைத் தற்போது நிரப்ப முடியாதுள்ளது.

(ஆ) உதவிச் சட்டவரைநர் பதவியில் நான்கு (04) வெற்றிடங்கள் உள்ளன. ப.நி. 6/2006 சுற்றறிக்கையின் நியதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை தயாரிக்கப்பட்டுப் பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(இ) பிரதி/ உதவிப் பணிப்பாளர் பதவியில் உள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்கு அலுவலரொருவரைக் கோரி, பகிரங்க நிருவாக அமைச்சுக்கு எழுத்திலான கோரிக்கையொன்று செய்யப்பட்டுள்ளது.

**மூன்றாம் நிலை மட்டம்**

மொழிபெயர்ப்பாளர் பதவியில் 23 வெற்றிடங்கள் உள்ளன. மொழிபெயர்ப்பாளர்களை ஆட்சேர்த்தல் தொடர்பில் தற்போது ஏற்புடையற்பாலதாகவுள்ள வயதெல்லையைத் திருத்துவதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அமைச்சரவைக் குறிப்பறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அது மேலே குறிப்பிடப்பட்டவாறு ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையைத் திருத்துவிப்பதற்கென, ப.நி. 2/2006 சுற்றறிக்கையின் நியதிகளின்படி அமைச்சரவையின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுமுள்ளது.

**இரண்டாம் நிலை மட்டம்**

பதிப்பாசிரியர்/ ஆவணப்படுத்துகை உதவியாளர் பதவியில் முப்பது (30) வெற்றிடங்கள் உள்ளன. இயைபான ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைக்காகப் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் இல்லாமையினால் இவற்றிற்கான ஆட்சேர்ப்புகளை முன்னெடுக்க முடியாதுள்ளது. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டதும் இவ் ஆட்சேர்ப்புக்களைச் செய்வதனை நிறைவேற்ற முடியும்.

**ஆரம்ப நிலை மட்டம்**

அலுவலக உதவியாளர் சேவையில் ஒரு (1) வெற்றிடமுள்ளது. சொல்லப்பட்ட வெற்றிடம் பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**3. திணைக்களத்தின் பிரிவுகள்**

இத்திணைக்களமானது அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பணிகளைப் புரிவதற்கெனப் பின்வரும் பிரிவுகளைக் கொண்டிருக்கின்றது:-

தாபன மற்றும் நிருவாகப் பிரிவு

சட்டவரைதற் பிரிவு

மொழிபெயர்ப்புப் பிரிவு

வெளியீட்டுப் பிரிவு

கணக்குப் பிரிவு.

**தாபன மற்றும் நிருவாகப் பிரிவு**

இப் பிரிவானது பணியாட்டொகுதியினரின் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வுகள், பயிற்சி, திறமைகாண் தடைப் பரீட்சைகளை நடாத்துதல், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, போக்குவரத்து மற்றும் திணைக்களத்திலுள்ள வேறெல்லாத் தாபன, நிருவாகக் கருமங்கள் என்பனவற்றைக் கையாளுகின்றது.

## (1) ஆட்சேர்ப்பும், பதவியுயர்வுகளும், ஒழுக்காற்று நிருவாகமும்

i சட்டவரைநர், மேலதிகச் சட்டவரைநர், பிரதிச் சட்டவரைநர் பதவிகளிலான வெற்றிடங்களை நிரப்புவதற்கும், அந்தந்தத் தரங்களுக்கு அலுவலர்களுக்குப் பதவியுயர்வுகளை வழங்குவதற்குமான நடவடிக்கையை இப்பிரிவு எடுத்தது.

ii சாரதிப் பதவியிலான 04 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

iii ஒரு சட்ட அலுவலருக்குக் குற்றச்சாட்டுப் பத்திரமொன்று சேர்ப்பிக்கப்பட்டு அவருக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கை இப்போது முடிவுறாதுள்ளது.

iv நிரந்தர ஊழியர்கோப்பில் மொழிபெயர்ப்பாளர் பதவியிலான வெற்றிடங்களுக்கு ஆட்சேர்க்கப்படும் வரை, எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் மீது மொழிபெயர்ப்பாளர்களை ஆட்சேர்ப்பதன் மூலம் மொழிபெயர்ப்பாளர் குழாமொன்று தாபிக்கப்பட்டது.

## (2) பயிற்சி:

**உள்நாட்டுப் பயிற்சி.**

அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட உள்நாட்டுப் பயிற்சி பின்வருமாறாகும்:

i. பகிரங்க நிதித் திணைக்களம் (மிலோதா)

| | | |
|---|---|---|
| பதவிநிலை அலுவலர்கள் | - | 01 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் சேவை | - | 06 |

ii. பகிரங்க சேவைப் பயிற்சி நிறுவகம்

| | | |
|---|---|---|
| முகாமைத்துவ உதவியாளர்கள் சேவை | - | 20 |
| சாரதிகள் சேவை | - | 03 |
| அலுவலகக் கருமங்களுக்கான உதவியாளர்கள் (K.K.S.) | - | 03 |

iii. <u>இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்</u>

| | | |
|---|---|---|
| சட்ட அலுவலர்கள் | - | 06 |

iv. <u>தொழிற் கற்கைகள் பற்றிய தேசிய நிறுவகம்</u>

| | | |
|---|---|---|
| சட்ட அலுவலர்கள் | - | 15 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் சேவை | - | 07 |

v. <u>தேசியச் சுவடிக்கூடத் திணைக்களம்</u>

| | | |
|---|---|---|
| சட்ட அலுவலர்கள் | - | 07 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் சேவை | - | 01 |

vi. <u>நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகம்</u>

| | | |
|---|---|---|
| முகாமைத்துவ உதவியாளர்கள் சேவை | - | 01 |
| சாரதிகள் சேவை | - | 01 |

vii. <u>இலங்கை – ஜேர்மன் தொழினுட்ப நிறுவகம்</u>

| | | |
|---|---|---|
| சாரதிகள் சேவை | - | 04 |

மேற்குறிப்பிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களைத் தவிர, சட்ட அலுவலர்களும் ஏனைய பதவிநிலை அலுவலர்களும் 15 உள்நாட்டுச் செயலமர்வுகளிலும் 05 உள்நாட்டுக் கருத்தரங்குகளிலும் பங்குபற்றினர்.

மேலும், புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட உதவிச் சட்டவரைநர்களுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு மனிதவள ஆளணியினரின் உதவியுடன் 20 நாள் விசேட உட்சேவைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தி, அவர்களுக்கு அறிவை வழங்குவதற்கும் மற்றும் சட்டங்களை வரைவதில் அவர்களின் தேர்ச்சிகளைச் சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**வெளிநாட்டுப் பயிற்சி.**

i சட்டவரைநர், அவுஸ்திரேலியாவில் சர்வதேச மாநாடொன்றில் பங்குபற்றினார்.

ii இரு சட்ட அலுவலர்கள், இங்கிலாந்திலும் ஐ.அ.நாட்டிலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றினர்.

iii நூலகப் பொறுப்பாளர் இந்தியாவில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றில் பங்குபற்றினார்.

## சட்டவரைநர் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பங்குபற்றிய வெளிநாட்டுப் பயிற்சிகள். 2012

| | பயிற்சியின் பெயரும் நாடும் | பயிற்சியில் பங்குபற்றிய அலுவலரின் பெயர் | தேதிகள் |
|---|---|---|---|
| 1. | சட்டவாக்க வரைதற் கற்கை நெறி – 2012, சட்டவாக்கக் கற்கைகளுக்கான சேர் வில்லியம் டேல் நிலையம், உயர்நிலைச் சட்டக் கற்கைகள் நிறுவகம், இங்கிலாந்து | திருமதி. எஸ். ஏ. தில்ருக்ஸி, சிரேட்ட உதவிச் சட்டவரைநர் | 2012.04.30 – 2012.05.25 |
| 2. | சர்வதேசச் சட்டவாக்க வரைதல் நிறுவகம் - 2012, ஐக்கிய அமெரிக்க நாடுகள் | திருமதி ரீ. வை. எம். ரணவண, சிரேட்ட உதவிச் சட்டவரைநர் | 2012.06.11 – 2012.06.22 |
| 3. | ABCD – நூலகப் பொறுப்பாளர் சேவைக்கான கணனி மென்பொருள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், இந்தியா | திருமதி எச். ஆர். சீ. கே. முதலிகே, நூலகப் பொறுப்பாளர் | 2012.12.04 – 2012.12.08 |

### சட்டவரைநர் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பங்குபற்றிய வெளிநாட்டு மாநாடுகளும் கருத்தரங்குகளும் . 2012

| | **மாநாட்டின் பெயரும் நாடும்** | **மாநாட்டில் பங்குபற்றிய அலுவலரின் பெயர்** | **தேதிகள்** |
|---|---|---|---|
| 1. | பணம் தூய்தாக்கல் பற்றி ஆசிய – பசுபிக் தொகுதியின் 15 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டமும் தொழினுட்ப உதவி அரங்கும் - பிறிஸ்போன், அவுஸ்திரேலியா. | திருமதி பீ. ஐ. எஸ். சமரசிங்க, சட்டவரைநர் | 2012.06.16. – 2012.06.20 |

## (3) வேறு தாபன மற்றும் நிருவாகச் செயற்பாடுகள்.

i தேசிய மற்றும் சர்வதேசச் சட்டங்களிலான அறிவை அலுவலர்களுக்கு வழங்குகின்ற I ஆம் தர நூலகமொன்றைத் திணைக்களம் கொண்டுள்ளது. மொத்தத்தில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெளியிடப்பட்ட 25 சட்டப் புத்தகங்கள் 2012 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

ii இத்திணைக்களத்தில் நலன்புரிச் சங்கமொன்றுள்ளது. 2012 ஆம் ஆண்டில் இச்சங்கம், பணியாட்டொகுதியுறுப்பினர்களிடையே கூட்டு ஒருமைப்பாட்டினை அதிகரிப்பதற்கான பயணங்களையும் அவர்களின் ஆன்மீக அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட மத நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்தது. அதன் உறுப்பினர்களின் நிதித்தேவைகளுக்கு உதவுவதற்கெனச் சங்கத்தினால் அவர்களுக்குக் கடன் வசதிகளும் வழங்கப்பட்டன. அத்துடன் மேலதிகமாக, சட்ட அலுவலர்கள் கழகமொன்றும் உள்ளது.

iii திணைக்களத்தினுள் உள்ள எல்லாக் கணினிகளும் ஒரு வலையமைப்பினுள் இணைக்கப்பட்டுள்ளதுடன், பதவிநிலை அலுவலர்கள் எல்லோருக்கும் மற்றும் வேறு பொருத்தமான அலுவலர்களுக்கும் கணினிகளும் இணைய வசதியும் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய அலுவலர்களுக்கும் கணினிகளுக்கும் இணைய வசதிக்குமான அணுகுகை வழங்கப்பட்டுள்ளது. புதிய தொழினுட்பவியலைப் பயன்படுத்துவதற்கு எல்லா அலுவலர்களுக்கும் வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் திணைக்களமானது e–ஆளுகைக் கொள்கையை நடைமுறைப்படுத்தியுள்ளது.

## சட்டவரைதற் பிரிவு

இப்பிரிவின் முக்கிய பணிகள் பின்வருமாறாகும்:-

- அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கங்களாக உருமாற்றுதல்.
- புதிய சட்டவாக்கங்களை ஆக்குவதற்கும் மற்றும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் எனச் சட்டமூலங்களை மும்மொழிகளிலும் வரைதல்.
- சட்டமூலங்கள் தொடர்பாக அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சட்ட மதியுரை வழங்குதல்.
- சட்டவாக்கங்களை நிறைவேற்றுதலுடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்றக் கடமைகளைப் புரிதல்.
- மாகாணசபைகளுக்கான நியதிச்சட்டங்களை வரைதல்.

## 2012 ஆம் ஆண்டு தொடர்பான வரைவுச் சட்டமூலங்கள் பற்றிய விபரங்கள்

| | வரைதல் (ஆண்டின் தொடக்கத்தில்) | ஆண்டின் போது திறத்தவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் | ஏலவேயுள்ள சட்டங்களுக்கான புதிய விண்ணப்பங்கள் | மொத்தம் | தயாரிக்கப்பட்டு இயைபான திறத்தவர்களுக்குக் கையளிக்கப்பட்ட சட்டமூலங்களின் எண்ணிக்கை | மூடிவிடப்பட்ட கோப்புகள் | இணைந்த கோப்புகள் | வரைதல் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| புதிய சட்டமூலங்களையும் மற்றும் திருத்தச் சட்டவாக்கங்களையும் வரைதல் | 203 | 42 | 2 | 247 | 21 | 69 | 3 | 154 |
| பாராளுமன்ற உறுப்பினர்களின் தனியார் உறுப்பினர்களின் சட்டமூலங்கள் | 67 | 41 | 7 | 115 | 23 | 28 | 1 | 63 |
| மாகாணசபை நியதிச்சட்டங்கள் | 15 | 4 | - | 19 | 1 | - | - | 18 |
| துணைநிலைச் சட்டவாக்கங்கள் (கட்டளைகள், விதிகள், ஒழுங்குவிதிகள் முதலியன) | 68 | 4 | 75 | 147 | 73 | 1 | - | 73 |

**2012 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள்**

| சட்டத்தின் இல. | சட்டத்தின் பெயர் | அத்தாட்சிப் படுத்தப்பட்ட தேதி | கோப்பு இல. |
|---|---|---|---|
| 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டம் | இராமகிருஷ்ண சாரதா மிஷன் (இலங்கைக் கிளை) கூட்டிணைத்தல்) | 17.01.2012 | ச.வ.ஓ. கூட். 18/2010 |
| 2012 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டம் | ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) | 09.02.2012 | ச.வ.ஓ. 43/2008 |
| 2012 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கச் சட்டம் | இலங்கை முதலீட்டுச் சபை (திருத்தம்) | 15.02.2012 | ச.வ.ஓ. 44/2011 |
| 2012 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டம் | வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தம்) | 15.02.2012 | ச.வ.ஓ. 37/2011 |
| 2012 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டம் | இலங்கை மத்திய கல்லூரிகளின் பழைய மாணவர் கழகம் (கூட்டிணைத்தல்) | 21.02.2012 | ச.வ.ஓ. 32/2010 |
| 2012 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டம் | மாத்தறை ராஹுல கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கொழும்புக் கிளை) (கூட்டிணைத்தல்) | 08.03.2012 | ச.வ.ஓ. 24/2010 |
| 2012 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டம் | சேர்பெறுமதி வரி (திருத்தம்) | 30.03.2012 | ச.வ.ஓ. 09/2012 |
| 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டம் | உண்ணாட்டரசிறை (திருத்தம்) | 30.03.2012 | ச.வ.ஓ. 10/2012 |
| 2012 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டம் | நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) | 30.03.2012 | ச.வ.ஓ. 05/2012 |
| 2012 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டம் | துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தம்) | 30.03.2012 | ச.வ.ஓ. 07/2012 |
| 2012 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டம் | பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்) | 30.03.2012 | ச.வ.ஓ. 06/2012 |
| 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டம் | நிதிச் சட்டம் | 30.03.2012 | ச.வ.ஓ. 08/2012 |
| 2012 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டம் | பாதுகாப்புச் சேவை ஏவுகை மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி (திருத்தம்) | 04.05.2012 | ச.வ.ஓ. 41/2010 |
| 2012 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டம் | ரீ.பி. ஏக்கநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) | 06.06.2012 | ச.வ.ஓ. கூட். 26/2010 |

| | | | |
|---|---|---|---|
| 2012 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டம் | புத்த சிராவக பிக்குப் பல்கலைக்கழகம் (திருத்தம்) | 11.07.2012 | ச.வ.ஓ. 52/2006 |
| 2012 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டம் | பலன புத்தர் சிலையை நிருமாணிப்பதற்கான ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) | 06.08.2012 | ச.வ.ஓ. கூட். 33/2010 |
| 2012 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டம் | த. மு. தசநாயக்க சமூக சேவைகள் மற்றும் அறக் கொடை மன்றம் (கூட்டிணைத்தல்) | 06.08.2012 | ச.வ.ஓ. கூட். 17/2011 |
| 2012 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டம் | கலாநிதி மாலனி பொன்சேகா மன்றம் (கூட்டிணைத்தல்) | 06.08.2012 | ச.வ.ஓ. கூட். 22/2011 |
| 2012 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டம் | பிய தசுன மன்றம் (கூட்டிணைத்தல்) | 06.08.2012 | ச.வ.ஓ. கூட். 21/2011 |
| 2012 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டம் | ரணவிரு சேவா அதிகாரசபை (திருத்தம்) | 17.01.2012 | ச.வ.ஓ. 18/2010 |
| 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டம் | உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) | 15.11.2012 | ச.வ.ஓ. 19/2008 |
| 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டம் | உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்) | 15.11.2012 | ச.வ.ஓ. 54/2007 |
| 2012 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டம் | ஒதுக்கீடு | 08.12.2012 | ச.வ.ஓ. 29/2012 |

குறிப்பு:

- ‘‘ச.வ.ஓ.’’ என்பது புதிய சட்டவாக்கங்களுக்கும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களுக்கான திருத்தங்களுக்குமான சட்டமூலங்களின் வரைவுகள் தொடர்பான கோப்புகளைக் குறிப்பீடு செய்கின்றது;
- ‘‘ச.வ.ஓ. கூட்.’’ என்பது கூட்டிணைத்தல்களுக்கான சட்டமூலங்களின் வரைவுகள் தொடர்பான கோப்புகளைக் குறிப்பீடு செய்கின்றது.

## மொழிபெயர்ப்புப் பிரிவு

(புதிய சட்டவாக்கங்களினதும் மற்றும் திருத்தச் சட்டவாக்கங்களினதும்) எல்லாச் சட்டமூலங்களின் வரைவுகளையும் மற்றும் சட்ட வரைதற் பிரிவினால் ஆங்கிலத்தில் மீளாய்வு செய்யப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களையும் இயைபான மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கு மொழிபெயர்ப்புப் பிரிவு பொறுப்பாகவுள்ளது. தாபன, மற்றும் நிருவாக மற்றும் கணக்குப் பிரவுகளினால் அனுப்பப்பட்ட அலுவலக முறையான ஆவணங்களைத் தேவைப்பட்ட மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கும் இப்பிரிவு பொறுப்பாகவுள்ளது.

## வெளியீட்டுப் பிரிவு

சட்டமூலங்களின் வரைவுகளினதும் மற்றும் துணைநிலைச் சட்டங்களினதும் ஆங்கில, சிங்கள மற்றும் தமிழ் உரைகளை ஒப்புநோக்குவதற்கும் செவ்வை பார்ப்பதற்கும், மற்றும் அரசாங்க அச்சகரினாலும் பாராளுமன்றத்தினாலும் அனுப்பிவைக்கப்பட்ட இயைபான ஒப்புநோக்கற் பிரதிகளை வரைவுகளின் மூலப் பிரதிகளுடன் வாசிப்பதற்கும் இவ் வெளியீட்டுப் பிரிவு பொறுப்பாகவுள்ளது. அத்தகைய ஒப்புநோக்கற் பிரதிகள் சட்ட அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் பதிப்பிக்கப்படுமிடத்து, அரசாங்க அச்சகருடனும் பாராளுமன்றத்துடனும் ஒருங்கிணைவதற்கும் மற்றும் அரசாங்க வர்த்தமானியில் சட்டமூலங்கள் வெளியிடப்படுதல் தொடர்பான கருமங்களைக் கவனிப்பதற்கும் இப்பிரிவு பொறுப்பாகவுள்ளது.

## கணக்குப் பிரிவு

### 015 சட்டவரைநர் திணைக்களம்

### 2012.01.01 – 2012.12.31

### செலவினம்

தலைப்பு : 015 - சட்டவரைநர்

நிகழ்ச்சித்திட்டம் : 01 தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

கருத்திட்டம் : 01 பொது நிருவாகமும் சட்டவாக்கங்களை வரைதலும்

(அ) 2012.01.01 முதல் 2012.12.31 வரையிலான மீண்டுவருஞ் செலவினம்

| **மீண்டுவருஞ் செலவினத்தின் விபரங்கள்** | **வரவுசெலவுத் திட்ட ஏற்பாடு (ரூபா)** | **தேறிய ஏற்பாடு (ரூபா)** | **மொத்தச் செலவினம் (ரூபா)** |
|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 36,250,000 | 36,250,000 | 34,785,208 |
| ஏனைய மீண்டுவருஞ் செலவினம் | 14,750,000 | 15,227,000 | 13,747,478 |
| மொத்த மீண்டுவருஞ் செலவினம் | **51,000,000** | **51,477,000** | **48,532,686** |

2012.01.01 முதல் 2012.12.31 வரையிலான மூலதனச் செலவினம்

| **மூலதனச் செலவினத்தின் விபரங்கள்** | **வரவுசெலவுத் திட்ட ஏற்பாடு (ரூபா)** | **தேறிய ஏற்பாடு (ரூபா)** | **மொத்தச் செலவினம் (ரூபா)** |
|---|---|---|---|
| **நிதிச்சொத்துக்களை மறுசீரமைத்தலும் சீராக்குதலும்**<br>2001 – கட்டடமும் நிர்மாணங்களும் | 100,000 | 100,000 | 89,286 |
| **மூலதனச்சொத்துக்களைக் கொள்ளுதல்**<br>2102 – தளபாடமும் அலுவலகச் சாதனங்களும் | 500,000 | 3,000,000 | 2,913,922 |
| **மனிதவள அபிவிருத்தி**<br>2401 – அறிவைச் சீராக்குதலும் நிறுவனஞ்சார் அபிவிருத்தியும் | 7,000,000 | 7,000,000 | 4,566,422 |
| **இலங்கைச் சட்டவாக்கங்களை மீளாய்தல்**<br>2502 - ஏனைய முதலீடு | 75,000,000 | 72,500,000 | --- |
| **மொத்த மூலதனச் செலவினம்** | **82,600,000** | **82,600,000** | **7,569,630** |

2012.01.01 முதல் 2012.12.31 வரையிலான வருவாய்க் கணக்கு

| விவரணம் | மதிப்பிடப்பட்ட வருவாய் (ரூபா) | வருவாய் (ரூபா) |
|---|---|---|
| வட்டி - ஏனையவை | 500,000 | 886,769.07 |

(அ) முற்பணக் கணக்கு – 015011

(2012.01.01 – 2012.12.31)

| | செலவினத்தின் ஆகக்கூடிய வரையறை (ரூபா) | வரவுகளின் ஆகக்கூடிய வரையறை (ரூபா) | பற்றுமீதியின் ஆகக்கூடிய வரையறை (ரூபா) |
|---|---|---|---|
| 2012 மதிப்பீடு | 5,300,000 | 2,000,000 | 24,000,000 |
| நி.ஒ.503(1), இல் 2012.12.31 உள்ளவாறான சீர்செய்தல்களுக்கு முன்னர் | 3,579,144 | 4,560,842 | 14,163,257 |

<u>நிறுவனத்தின் செயல்நிறைவேற்றம் பற்றிய சுருக்கம்</u>

சட்டவரைஞர் திணைக்களத்தின் பிரதான பணியானது பல்வேறு விடயங்கள் பற்றிய அரசாங்கக் கொள்கைகளை அரசியலமைப்புக்கு ஒத்ததாகவுள்ள சட்டவாக்கங்களாக உருமாற்றம் செய்வதாகும். இந்நடைமுறை, புதிய சட்டவாக்கங்களை வரைதல், ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துதல், சட்டவாக்கங்களை ஒன்றுதிரட்டுதல் மற்றும் இயைபான அமைச்சுக்களினால் ஆற்றுப்படுத்தப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களை மீளாய்வுசெய்தல் என்பவற்றைக் கொண்டுள்ளது. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய வரைவுச் சட்டமூலங்களைப் பரிசீலனைசெய்வதற்குக் கூட்டப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுக்களின் கூட்டங்களில் பங்குபற்றுவதனையும், சட்டமூலங்கள் விவாதத்திற்கு எடுக்கப்படும் போது பாராளுமன்றத்துடன் ஒருங்கிணைவதனையும் உள்ளடக்குகின்ற குறித்த சில வேறு கடமைகளும் இத்திணைக்களத்திற்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளன. மேலும், துணைநிலைச் சட்டவாக்கங்களைத் தயாரித்தல் தொடர்பாக அமைச்சுக்களுக்கும், அரசாங்கத் திணைக்களங்களுக்கும் இத்திணைக்களம் சட்ட மதியுரையையும் வழங்குகின்றது.

சட்டவரைதற் பிரிவின்கீழ் 2012 ஆம் ஆண்டுக்கு இயைபான சட்டங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

கணக்காய்வாளர் தலைமையதிபதி
கணக்காய்வாளர் தலைமையதிபதித் தணைக்களம்
பத்தரமுல்ல.

**<u>ஒதுக்கீட்டுக் கணக்கு-2012</u>**
**<u>தலைப்பு இல.15- சட்டவரைஞர் திணைக்களம்</u>**

மேற்குறிப்பிடப்பட்ட அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குடன் சேர்த்தனுப்பப்பட்ட 21.06.2013 ஆந்தேதிய கணக்காய்வுக் கேள்விகள் தொடர்பாகப் பின்வரும் விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது:-

01. இரு செலவினத் தலைப்புக்களின் கீழும் குறித்தளிக்கப்பட்ட 65,076,000/- ரூபாவான முழுத் தொகையும் செலவிடப்படாமல் இருந்தமைக்கான காரணம் கீழே விளக்கப்படுகின்றது:-

| செலவினத்தலைப்பு | நிதியேற்பாடுகள் | நிதியேற்பாடுகளின் பகுதி செலவிடப்படாது எஞ்சியிருந்தமைக்கான காரணம். |
|---|---|---|
| 15-1-1-1401 | 10,000 | எதிர்பார்க்கப்பட்டவாறு கட்டிடங்களை நிர்மாணிப்பதிலும், திருத்துவதிலும் போக்குவரத்துச் செலவெதுவும் ஏற்படவில்லை; ஏனெனில், அத்தகைய நிர்மாண மற்றும் திருத்த வேலை தொடர்பான உடன்படிக்கைகளை கையொப்பமிடுவதிலான தாமதம் காரணமாக எதிர்நோக்கியவாறு அத்தகைய வேலை நடைபெறவில்லை. |

| | | |
|---|---|---|
| 15-1-1-2502 | 65,066,000 | சட்டவாக்கங்களைத் திரட்டுவதற்கான கருத்திட்டத்துக்காக இந்நிதியேற்பாடுகள் குறித்தொதுக்கப்பட்டன. எவ்வாறாயினும், சொல்லப்பட்ட கருத்திட்டத்தை தொடங்குவதற்குத் தேவைப்பட்ட வரைவு அமைச்சரவைக் குறிப்பறிக்கை கிடைக்காமை காரணமாக கருத்திட்டத்துக்கான அங்கீகாரத்தைப் பெறுவதில் தாமதமேற்பட்டமையினால் முழுத்தொகையும் செலவிடப்படாது எஞ்சியிருந்தது. |

02. 2 செலவீனத் தலைப்புக்களுக்காகக் குறித்தொதுக்கப்பட்ட 5,306,352 ரூபா தொகையிலான மொத்த நிதியேற்பாடுகளிலிருந்து 2,793,648 ரூபா பணத்தொகை செலவிடப்படாது எஞ்சியிருந்தமைக்கான காரணம் கீழே கொடுக்கப்படுகின்றது:-

| செலவினத் தலைப்பு | மீதி | மீதி உள்ளமைக்கான காரணங்கள் |
|---|---|---|
| 15-1-1-1302 | 360,070 | திணைக்களம் அமைந்துள்ள கட்டிடத்தைப் பேணுவதிலும் அதன்கண் பொருத்தப்பட்ட மின் உயர்த்தி, தீயணைப்புச் சாதனங்கள் மற்றும் காற்றுச் சீராக்கல் சாதனங்கள் என்பவற்றைப் பேணுவதிலும் தொடர்பில் நீதியமைச்சுக்குக் குறித்தொதுக்கப்பட்ட நிதியேற்பாடுகள் அத்தகைய வேலைக்காகச் செலவிடப்படாதிருந்தமையினால், இது மீதியொன்று உருவாக்கப்படுவதனை விளைவித்துள்ளது. |
| 15-1-1-1401 | 2,433,578 | மீதியொன்று இருப்பதற்கான காரணம் என்னவெனில், எதிர்பார்க்கப்பட்டவாறு |

| | | |
|---|---|---|
| | | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் அலுவலர்களைப் பங்குபற்றச் செய்வதற்கு இயலாமலிருந்தமையாகும். |

03. நிதி ஒழுங்குவிதிகள் 94 இன்படி, பொறுப்புக்களினதும் செலவினங்களினதும் தொகை அந்நிதியாண்டுக்காகக் குறித்தொதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளை எச்சூழ்நிலைகளிலும் விஞ்சாதிருக்கவேண்டியபோதிலும், இரு செலவினத்தலைப்புக்களின் கீழுமான மீதியை விஞ்சுகின்றவாறு 201,088 ரூபாவான பொறுப்பொன்று விளைந்தமைக்கான காரணம் கீழே விளக்கப்பட்டுள்ளது:-

| செலவினத் தலைப்புக்கள் | மீதிக்கு மேலான பொறுப்புக்கள் | விளக்கம் |
|---|---|---|
| 15-1-1-1402 | 45,365 | 2012 திசெம்பர் மாதத்திற்கான தொலைபேசிச் சிட்டை 2013 சனவரி மாதத்தில் பெறப்பட்டதனால், சிட்டைத் தொகை பற்றி முன்கூட்டியே தீர்மானிக்க முடியவில்லை; இதனால் மீதிக்கு மேலான பொறுப்புக்கள் விளைந்தது. |
| 15-1-1-1403 | 155,723 | 2012 திசெம்பர் மாதத்திற்கான தொலைபேசிச் சிட்டை 2013 சனவரி மாதத்தில் பெறப்பட்டதனால், இத்தொகை பற்றி முன்கூட்டியே தீர்மானிக்க முடியவில்லை; இதனால் மீதிக்கு மேலான பொறுப்புக்கள் விளைந்தது |

சட்டவரைஞர்
சட்டவரைஞர் திணைக்களம்
80, அதிகரண மாவத்தை
கொழும்பு 12.

<u>நிறுவனத்தின் செயல்நிறைவேற்றத்தை மேம்படுத்துவதற்கென எடுக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்ட இடைநிலையான வழிமுறைகள் பற்றிய சுருக்கம்</u>

(i) முறையான அமைச்சுக்களிடமிருந்தும், திணைக்களங்களிடமிருந்தும் பாராளுமன்றத்தின் தனிப்பட்ட உறுப்பினர்களிடமிருந்தும் பெறப்பட்ட வரைவுச் சட்டங்களும் சட்டங்களுக்கான திருத்தங்களும் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு துரிதமாக அனுப்பிவைக்கப்படவேண்டுமென அலுவலர்களுக்கு கிரமமானமுறையில் அறிவிக்கப்படுகின்றது.

(ii) அனுபவம்வாய்ந்த சிரேட்ட அலுவலர்களை இழந்தமையினால் ஏற்பட்ட தாக்கத்தை ஓரளவுக்கு மேற்கொள்வதற்கு, சட்டவாக்கங்களை வரையும் நோக்கத்துக்காக ஆலோசகர்கள் ஆட்சேர்க்கப்படவுள்ளனர்.

(iii) வரைவுச் சட்டங்களினதும் சட்டங்களுக்குச் செய்யப்பட்ட திருத்தங்களினதும் மொழிபெயர்ப்புகளைப் பொறுப்பேற்பதற்குப் பொருத்தமான மொழிபெயர்ப்பாளர்கள் குறைவாகவுள்ளனர். இது சம்பந்தமாக, விசேடமாக தமிழ் மொழிபெயர்ப்பாளர்களின் பற்றாக்குறை தொடர்பாக, தற்போது அரசகருமமொழித் திணைக்களத்தில் பணிபுரிகின்ற (வரைவுச் சட்டவாக்கங்களை மொழிபெயர்ப்பதில் அனுபவமுடைய) தமிழ் மொழிபெயர்ப்பாளர்களின் உதவி பெறப்படுகின்றது.

(iv) வரைவுச் சட்டவாக்கங்களுக்கான பதிப்பாசிரியர் மற்றும் ஆவணப்படுத்துகை உதவியாளர் பதவியிலான வெற்றிடங்களை ஏலவே பதவியிலுள்ளோரிடையேயிருந்து தேவைப்பட்ட எண்ணிக்கையினரான அலுவலர்களை ஆட்சேர்ப்பதன் மூலம் நிரப்புவதற்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையொன்றுக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(v) அலுவலர்கள் தமது அறிவையும் தேர்ச்சிகளையும் சீராக்குவதற்கென, உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் வெளிநாட்டுக் கருத்தரங்குகளுக்கும் செல்வதற்கான வாய்ப்பை வழங்குதல்.

(vi) புதிய தொழினுட்பவியலைப் பயன்படுத்துவதனை இயலச்செய்வதற்கு எல்லாச் சட்ட அலுவலர்களுக்கும் இணைய வசதிகளுடனான கணனிகள் வழங்கப்பட்டுள்ளன.

(vii) அலுவலர்களின் தேர்ச்சிகளையும் அறிவையும் சீராக்கி அதன்மூலம் வெளிநாட்டுச் சட்டப் புத்தகங்களைக் கற்பதற்கான வசதிகளை வழங்குவதற்கு ‘A’ தர நூலகமொன்றைத் தாபித்தல்.